**தலைப்பு 263 – அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல்கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய வைப்புக்கள் பெறுவனவு ரூபா 875,957,552 மற்றும் ஏனைய பெறுவனவுகள் ரூபா 550,385,916 ஆக இருந்த போதும் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதி முறையே ரூபா 876,397,002 மற்றும் ரூபா 549,946,466 ஆக இருந்தன. இவ்விரண்டு பெறுகைகளுக்கு | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 279/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொண்ட திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளதாக. |

| | | | |
|---|---|---|---|
| | இடையேயான வேறுபாட்டிற்கு காரணம் ரூபா 439,450 தொகை வேறு தலைப்பொன்றுக்குரிய வைப்புக்கள் பெறுவனவு ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் மாவட்ட செயலகத்திற்குரிய வைப்புக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | திறைசேரி கணனி அச்சீட்டின் பிரகாரம் முற்பணப் பெறுவனவு மீதி ரூபா 81,605,145 ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 71,081,815 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொண்ட திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளதாக |
| (இ) | திறைசேரி கணனி அச்சீட்டின் பிரகாரம் வைப்புக்கள் கொடுப்பனவு ரூபா 905,389,872 ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 905,390,922 என ரூபா 1,050 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி கணனி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | மோட்டார் வாகன வைப்புக் கொடுப்பனவு ரூபா 1,050 இவ்வேறுபாட்டிற்கு காரணமாகும். |

1.6.2 **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 பெப்ரவரி 11 ஆந் திகதிய PS/NC/4/CP/41/2019 ஆம் இலக்க அமைச்சரவை | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கடன் சலுகை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசி | மீள அறவீடு செய்யும் நோக்கில் தேசிய தேவைப்பா டொன்றுக்காக | 2020.06.18 மாவட்ட செயலக மற்றும் நெல் ஆலை உரிமையாளர் களுக்கு இடையே நடைபெற்ற |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விஞ்ஞாபனம் | | உற்பத்தியாளர்களின் வ/ப கூட்டுறவு சங்கமொன்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 38,000,000 ஆன வட்டியற்ற கடன் 2019 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரை ஆலை உரிமையாளர் களிடமிருந்து முழுமையாக அறவிட வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதியான 2020 யூன் 30 ஆந் திகதி வரை ரூபா 26,445,848 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஈடுபடுத்தப்பட்ட அரசின் பணம் குறித்துரைக்கப் பட்ட செயற்பாடு களின் இறுதியில் குறித்த தரப்பினர் களிடமிருந்து அறவீட்டு திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டும் | கூட்டத்தில் ஆலை உரிமையாளர்களால் 03 மாத சலுகை காலத்திற்கும் கடன் கொடுப்பனவு நடைமுறைகளுக்கு உட்பட்டு இக்கடனை கொடுத்து தீர்ப்பதற்கு இணங்கியுள்ளதாகவும் |
| (ஆ) | 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 10(1) பந்தி மற்றும் 2003 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1303/17 ஆம் அதிவிசேட வர்த்தமானியின் 15 பந்தி | i | ஒக்கெவெல பிரதேச செயலகப் பிரிவில் தனியார் காணியொன்றில் நடாத்திச் செல்லப்பட்டு வந்த கருங்கல் வேலைத்தளம், தமது சொந்த காணியை மிகைத்து அரசின் காணியில் 0.6227 ஹெக்டேயர் அளவு காணியில் 10,911 கியுப் அகழப்பட்டிருந்ததுடன் அதற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலகத்தினால் அரசின் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை | அரசின் காணி மற்றும் அத்துமீறிய பயன்பாடு ஆமறகொள்ளப் பட்டட ஆதனங் களுக்காக நிர்ணயித்த அரசின் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2019.12.12 ஆந் திகதி மாவட்ட செயலகத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது . |
| | | ii | திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தின் அஞ்சலிகல கிராம சேவையாளர் பிரிவினை அண்மித்ததாக 02 ஏக்கர் விசாலமான அரசின் காணியொன்றில் மூன்று நபர்களால் நீண்டகால அனுமதியற்ற கருங்கல் வேலைத்தளமொன்று நடாத்திச் செல்லப்பட்டு வருவதுடன் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் 2019 ஒக்தோபர் 15 ஆந் திகதிய அறிக்கையின் பிரகாரம் அக்காலப்பகுதியில் 41,336 கியூப் கருங்கற்கள் | அரசின் ஆதனங்கள் மற்றும் கனிய வளங்களை பாதுகாப்பது அரச உத்தியோகத்தர்க ளின் பொறுப்பாக இருந்ததுடன், அத்துமீறிய வெடிபொருட்கள் பயன்பாட்டிற்கு உள்ள சந்தர்ப்பங்களை தவிர்ப்பதும் உத்தியோகத்தர் களின் பொறுப்பாகும். | அவதானிப்பு சரியானது. 1995 ஆம் ஆண்டிலிருந்து அகழ்வு இடம்பெற்று வருவதாகவும் கைகளால் கருங்கள் உடைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததாக வும் கொம்பிரஷர் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு கல் அகழ்வதாக அறிக்கையிடப் பட்டதன் பின்னர் இது தொடர்பாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அகழப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அரசின் காணி இவ்வாறு பயன்படுத்தியமைக்காக அரசின் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை | | அகழ்தல் பொறியிய லாளருக்கும் வீரவில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் அறிக்கையிடப்பட்டிருந் தாகவும். |
| | | iii | அம்பாந்தோட்டை மாவட்டத்தின் 05 பிரதேச செயலக பிரிவுகளில் நடாத்திச் செல்லப்படும் 12 கருங்கல் வேலைத் தளங்களில் மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய அரசின் கட்டணங்களிலிருந்து குறைத்து அறவிடல் மற்றும் அகழப்பட்ட கற்களின் அளவினை குறைத்து கணக்கிட்டதால் 2009 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூபா 198,898,250 தொகை அரச வருமானத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் விதிகள் ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட அரசின் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன் அரசின் வருமானத்தை சேகரிப்பதற்குரிய சுற்றறிக்கைகள் திருத்தம் செய்யப்பட வேண்டியமை தொடர்பில் தொடர்பாக மாவட்ட செயலகத்திற்கு அல்லது அறிவித்தல் இடம்பெறவில்லை என்பதால் கட்டணங்கள் குறைத்து அறவிடப் பட்டுள்ளதாகவும் |
| (இ) | பாதுகாப்பு அமைச்சின் சுற்றறிக்கை<br>-------------------<br>2004 ஏப்ரல் 14 ஆந் திகதிய 04/சீஎஸ்/3/10/1/ பொது இலக்க கடிதம் | | 01 கிலோ கிராம் டைனமைட்டால் உடைக்கக் கூடிய கருங்கல் அளவு 2½ கியூப் என கணக்கிடப்படும் வகையில் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. அகழ்வு செயற்பாடுகளுக்காக வெடி பொருட்கள் கட்டுப்பாட்டாளரால் அமோனியம் நைட்ரேட், டைனமைட் மற்றும் கல்வெடி மருந்து ஆகிய மூன்று வெடிபொருட்களும் வழங்கப்பட்டிருந்த போதும் பிரதேச செயலகத்தினால் அரச கட்டணங்களை அறவிடும் போது அகழப்படும் கருங்கல் அளவு டைனமைட் வெடிபொருளை மாத்திரம் | அரசின் கட்டணங்களை அறவிடுவதற்காக வழங்கப்படும் அனைத்து வெடி பொருட்களையும் அடிப்படையாகக் கொண்டு அகழ்வு அளவினை கணக்கிடுவதற்காக நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். 2017.10.16 ஆந் திகதி மாவட்ட செயலாளர்கள் மாநாட்டின் போது புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த உத்தியோகத்தராலும் இது உறுதிப் படுத்தப்பட்டதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையாக கொண்டு கணக்கிடப்படுகின்றது. | | |
| (ஈ) தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | | | |
| 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 மற்றும் 03 ஆம் பந்திகள் | அம்பாந்தோட்ட மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 13,387 புதிய சமுர்த்தி பெறுநர்களில் 4,186 சமுர்த்தி பெறுநர்களுக்கு சமுர்த்தி உரித்துச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தின் உபசரிப்பு, எரிபொருள், எழுதுகருவிகள் உட்பட செலவினங்களுக்காக ரூபா 645,503 மற்றும் நலனாளிகளுக்காக வழங்குவதற்காக 5000 மா கன்றுகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,495,000 தொகை உட்பட ரூபா 2,140,503 செலவிடப்பட்டதன் மூலம் சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் அரச செலவினங்கள் சிக்கனமாக செய்யப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அரச செலவினத்தை முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச கொள்கையை செயற்படுத்துவதற்கு நடைபெற்ற சந்தர்ப்பமொன்றாக நடைபெற்ற இவ்வைபவத்தினை கட்டுப்படுத்த மாவட்ட ரீதியாக முடியாமல் இருந்ததாகவும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 07 மீண்டெழும் செலவின விடயங்களில் சேமிக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 5,851,000 தொகை வேறு 06 செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன. | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி 50(ii) இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டும் | 20/2018 சுற்றறிக்கையின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் இணைந்த படிகள் திருத்தம் செய்யப்பட்டமை, மாவட்ட செயலகத்தின் குழாம் வாகனங்கள் பல சிதைவடைந்து நிலைமையில் காணப்பட்டதால் அடிக்கடி திருத்த வேலைகளைச் செய்வதற்கு நேர்ந்தமை, மூலதன செலவின விடயங்களில் 15 சதவீதம் |

| | | |
|---|---|---|
| | | பதிவழிப்பதற்கு நேர்ந்தமையால் 2002 செலவின விடயத்திற்குரிய செலவினம் 1302 இலிருந்து செலவிடப்பட்டமை மற்றும் 2003 இற்குரிய செலவினம் 1301 இலிருந்து செலவிடப்பட்டமை போன்ற காரணங்களால் நிதி ஏற்பாடுகளை மாற்றுவதற்கு நேர்ந்தது. |

**2.2 கட்டுநிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தினால் திறைசேரி யிடமிருந்து கோரப்பட்டிருந்த கட்டுநிதி ரூபா 8,020,934,000 ஆக இருந்தபோதும் வழங்கப்பட்டிருந்த கட்டுநிதி ரூபா 3,436,248,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 4,584,686,000 ஆன கட்டுநிதி திறைசேரியிடமிருந்து கிடைக்காமையால் மீளாய்வாண்டில் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களத்தின் கீழ் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு முழுமையாக பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் உருவாகியிருக்கவில்லை. எடுத்துக் காட்டாக கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 11 பிரதேச செயலகங்களுக்கு 384 செயற்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடு ரூபா 173 மில்லியன் கிடைக்காமையால் அச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட செயற் திட்டங்களை குறித்துரைக் கப்பட்டதன் பிரகாரம் செயற்படுத்துவதற்காக திறைசேரியினால் குறித்துரைக்கப்பட்ட கட்டுநிதியை விடுவிப்பதன் மூலம் இவ்வாறான சிக்கல்களிலிருந்து விடுபடலாம். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திஸ்ஸமஹாராம மற்றும் பெலிஅத்த பிரதேச செயலகங்களில் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 443,538 தொகை நீண்டகாலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | காலம் கடந்த கடன் மீதிகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு உத்தியோகத்தரின் மகள் கொடுப்பனவு செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதால் 60 தவணைகளில் அறவிடுவதற்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அங்கீகாரத்தை கோரியுள்ளதாகவும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்காக சட்டமா அதிபரின் ஆலோசணைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் |
| (ஆ) | அம்பாந்தோட்டை மற்றும் அங்குணுகொலபெலஸ்ஸ ஆகிய இரண்டு பிரதேச செயலகங் களிலிருந்து சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் ரூபா 176,144 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை பிணையாளரிடம் அறவிடுவதில் சிக்கல் காணப்படுவதாகவும் மற்றைய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பாக சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடையாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக மக்கள் வாழ்க்கையை நடாத்திச் செல்வதில் ஆபத்துடன் கூடிய பிரதேசங்களில் மக்களை வேறு | நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் நலனாளிகளை தெரிவு செய்வதற்கு | குடியிருப்பதற்காக வராத நபர்களை உடனடியாக புதிய வீடுகளில் குடியிருப்பதை உறுதிப்படுத்தி பிரதேச செயலக மட்டத்தில் |

| | | |
|---|---|---|
| பிரதேசங்களுக்கு குடியேற்றும் நோக்கில் 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 06 பிரதேச செயலகங்களில் பாதுகாப்பான பிரதேசங்களில் வீடுகளை அமைப்பதற்காக ரூபா 127,450,000 தொகை 91 நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2020 சனவரி 03 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் நோக்கமான ஆபத்தான பிரதேசங்களில் உள்ள மக்களை புதிய வீடுகளில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>தெரிவு பரிசோதனையின் போது கட்டுவன பிரதேச செயலகத்தில் ரூபா 11,025,000 கூட்டுத்தொகை வழங்கப்பட்டிருந்த 07 நலனாளிகளும், வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவின் ரூபா 1,575,000 தொகை வழங்கப்பட்டிருந்த புத்தியாகம, ஒரு நலனாளியும், ஒகெவெல கந்தேகட்டியவில் ரூபா 900,000 வழங்கியிருந்த ஒரு நலனாளிக்கும் பெலிவத்த நெலுவ ரூபா 200,000 வழங்கப்பட்டிருந்த ஒரு நலனாளியும் வெவ்வேறு காரணங்கள் காரணமாக புதிய வீடுகளுக்கு குடியிருப்பதற்கு செல்லாமல் ஆபத்தான பிரதேசங்கள் குடியிருந்தனர். | செயலாற்றல் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் பணத்தை விடுவிப்பதற்கும் பின் தொடர் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் |

**3.2 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கிராம சக்தி மக்கள் வியாபார நிகழ்ச்சித் திட்டத்தின் 1 ஆம் கட்டத்தின் கீழ் 12 பிரதேச செயலகங்களின் 36 கிராம சக்தி மக்கள் சங்கங்கள் | அரசிற்கு சொந்தமான பணத்தை பொதுமக்கள் நலன்களுக்காக செலவிடாமல் நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்காமல் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட செயற் | கிராம சக்தி வியாபாரம் கடந்த அரசின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமாக இருப்பதால் அரச பொறிமுறையில் ஏற்பட்ட மாற்றத்தின் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்துவது |

| | | | |
|---|---|---|---|
| | வாழ்வாதார அபிவிருத்தி செயற்பாட்டிற்காக வழங்கப்பட்ட ரூபா 27,757,257 தொகையை கணக்காய்வு திகதியான 2020 மே 15 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் ஓராண்டுக்கு மேற்பட்ட காலம் சங்கங்களில் சேமிப்பாக காணப்பட்டன. | திட்டங்களை செயற் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக ஆலோசனை கிடைக்கவில்லை எனவும் |
| (ஆ) | கிராம சக்தி மக்கள் வியாபாரம் நிகழ்ச்சித் திட்டத்தின் 11 ஆம் கட்டிடத்தின் கீழ் 108 கிராம சக்தி சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக தேவையான அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | மேற்குறித்த கருத்துரை பொருந்தும். |

**3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.3.1 புதிய மூன்று மாடி கட்டிட நிர்மாணம் மற்றும் எல்லை சுவர் நிர்மாணம் பிரதேச செயலகம் - ஒகெவெல**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிடத்தை திட்டமிடும் போது ஒப்பந்தத்தை வழங்கும் போதும் இனங்காணப்பட்ட பலவீனங்கள் | | |
| i | கட்டிடத்தை திட்டமிடும் போது பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கும் போதும் காணி மற்றும் சேவை நாடுனரின் தேவைப்பாடு | நிர்மாணம் தொடர்பாக மதிப்பீடு தயாரிப்பதற்கு முன்னர் நிர்மாணக் காணி மற்றும் சேவை நாடுனரின் | அப்போதைய பிரதேச செயலகம் காணப்பட்ட காணியின் முன்னைய திட்டமிடப்பட்ட கட்டிடம் வேறொரு காணியில் நிர்மாணிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக கவனம் செலுத்தியிருக்க வில்லை நிர்மாணத்தை மேற்கொள்ளும் போது கட்டிடத்தின் திட்டத்தில் வேறுபாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்த துடன் மேலதிக வேலைகளாக 72 உருப்படிகளுக்காக ரூபா 5,405,626 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டிடத் திட்டத்தை தயாரித்தல் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தேவைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | நேர்ந்தமையால் ஒப்பிடும் போது ஏற்பட்ட சிக்கலொன்றாகவும் |
| ii | தெரிவு செய்யப்பட்ட முதலாவது கேள்விதாரரின் செயலாற்றல் மற்றும் முற்பண பிணை ஆகிய இரண்டும் போலியானதாக இருந்த போதும் அது தொடர்பாக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) இற்கு அறிவிக்கவோ அல்லது ஒப்பந்தக்காரருக்கு எதிராக சட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் வெளிப் படுத்தப்படாததுடன் புதிய ஒப்பந்தத்தின் கைமயளித்தல் மூலம் அரசிற்கு ரூபா 3,677,718 ஆன மேலதிக கிரயமொன்று மேற்கொள்ள நேர்ந்தது. | நிதிப்பிரமாணம் 101 முதல் 110 வரையான பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அரசிற்கு சாதகமான வகையில் அரசின் கிரயம் குறையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்ட நடவடிக்கைகளுக்காக ஆவணங்களின் மூலம் பிரிவுகள் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும். |

**(ஆ) பொறியியலாளர், மதிப்பீட்டை தயாரிக்கும் போது ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் நட்டங்கள்**

| | | | |
|---|---|---|---|
| i | பொறியியலாளர் மதிப்பீட்டில் பிரதான 3 விடயங்களில் ரூபா | நிறைவேற்றக்கூடிய வேலை விடயங் களுடன் மதிப்பீடு | கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் இவ்விடயத்திற்காக நில |

| | | | |
|---|---|---|---|
| | 5,484,292 ஆன வேலைகள் கைவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் கைவிடப்பட்ட வேலைகளுக்காக ரூபா 948,973 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட்டு அவ்வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலங்காரத்தின் கீழ் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப் படுவதால் இவ்விடயத்தை நிறைவேற்ற இம் மதிப்பீட்டின் கீழ் நிறைவேற்றப்படவில்லை எனவும் |
| ii | பொறியியலாளர் மதிப்பீட்டின் பிரகாரம் மின் இணைப்பிற்காக ரூபா 2,245,030 ஆன மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்த போதும் மேலதிக வேலைகள் மற்றும் வெளி வேலைக்காக மொத்த மின்சார முறைமைக்காக ரூபா 4,996,348 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் கட்டிடத்திற்கு முத்தரப்பு மின் வழங்கலொன்றுக்காக ரூபா 12,175 தொகை யான போதியளவில் இல்லாத பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட்டிருந்த பொறியியலாளர் மதிப்பீட்டில் அசாதாரண வேறுபாடு காணப்படக் கூடாது. | ரூபா 100 மில்லியனை மிகைத்து இருப்பதால் இச் செலவினத்தை மதிப்பீட்டிற்கு உட்படவில்லையென |
| iii | கட்டிடத்தின் வெளி அலங்காரத்திற்காகவும் வயர்களின் பாதுகாப்பிற்கு தாக்கம் ஏற்படாத வகையில் மின்வயர்களை இழுப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கேசிங் (Casing) வெளியே தெரியும் வகையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் பட்டியலின் Ex.54 இன் கீழ் மின் விசிறிகளை பொருத்துவதற்காக | நிர்மாண முறையான உருவமைப்பு நிறை வேற்றப்பட வேண்டும். வேலை விடயம் தொடர்பாக முன்னைய தெளிவுடன் விலை விபரங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவ்வாறு இருக்கையில் மேலதிக வேலைகளுக்காக மீள் கொடுப்பனவு பொருத்தமற்றது. | ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் வயரிங் குழாய் பயன்படுத்த முடியாதிருப்பதாலும் கூரை உயரமாக இருப்பதால் மின் விசிறிகளை தொங்க விடும் இடங்களில் பராலைகள் இல்லாமையால் புறம்பான கட்டமைப்பொன்றை தயாரிக்க நேர்ந்துள்ளதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆதரமாகாக தயாரிப்பதற்கு ரூபா 282,225 கொடுப்பனவு மேலதிகமான செலவாக அவதானிக்கப்பட்டது. | | |
| iv | மதிப்பிடப்பட்ட விடய இல. C-I இன் கீழ் மணல் வெட்டுவதற்கும் பரப்புவதற்கு 900 கன மீற்றர் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் பட்டியல் மூலம் அளவீட்டு அறிக்கை தனி அளவீடாக இலங்கை தரத் (SLS – 573) இற்கு முரணாக மேற்கொண்டு 9552 கனமீற்றருக்காக ரூபா 1,930,432 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் வெட்டி அகற்றிய 9,552 கனமீற்றரான மண் எந்த செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பான உறுதிப்படுத்தலொன்று கோவையில் காணப்படவில்லை. | மதிப்பீடு விடய அளவு மற்றும் விடயத்திற்குரிய செய்யப்பட்ட வேலை அசாதாரணமான விலகலொன்று காணப்படக்கூடாத போதும் தொழில்சார்/ கைத்தொழிலாளர் தமது தொழிலை நிறைவேற்றும் போது தொழில் தரங்கள் தொர்பாக கவனம் செலுத்த வேண்டிய போதும் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக முறையான பதிவேடுகளுக்கு உட்படுத்தி வெளிப்படையாக மேற்கொள்ள வேண்டும். | அவசரமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையால் நில அளவையாளர் அளவீட்டின் பிரகாரம் கணக்கிடப்பட்டு மண் வெட்ட முடியாததெனவும் வெட்டி அகற்றிய மண்ணை சுற்றியுள்ள பாடசாலை மற்றும் விஹாரைகள் போன்ற இடங்களில் இட்டதாகவும் |
| **(இ)** | **ஒப்பந்தக்களுக்காக கொடுப்பனவு செய்தல், காலத்தை நீடித்தல் மற்றும் பராமரித்துச் செல்லும் போது இடம்பெற்ற குறைபாடுகள் மற்றும் நிதி நட்டங்கள்**<br>---------------------------------------------- | | |
| i | நிர்மாண வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னர் வழங்கப்பட வேண்டிய வேலைத்திட்டம் (work schedule) மற்றும் செய்யப்பட்ட வேலைகளின் முன்னேற்றம், எஞ்சிய காலப்பகுதிக்கான புதிய வேலைத் திட்டமும் | நியாயமான காரணங்களை அடிப்படையாக கொண்டு ஒப்பந்த காலம் நீடிக்கப்பட வேண்டும். வேலைத்தளங்கள் முறையாக முகாமைத்துவத்துடன் பேணிச் செல்வதற்காக | மேற்பார்வை செய்வதற்காக போதியளவு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாமையால் வேலைத் திட்டமொன்றை பெற்றுக் கொள்ளவில்லை எனவும் காணியில் மண்ணை அகற்றுதல் தாமதம் மற்றும் கற்களை அகற்றுவதற்காக வெடிபொருட்கள் வழங்க முடியாததன் பேரில் காலம் |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளாமல் 6½ மாதங்கள் மற்றும் மதிலுக்காக 90 நாட்கள் காலமும் ஒப்பந்த காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. மேற்படி விடயம் தொடர்பாக பொறியியலாளர்கள் வேலைத்தளத்தை முறையாக மேற்பார்வை செய்தார்களா என்பது சர்ச்சைக்குரியதாக இருந்தது, | திட்டமிடப்பட வேண்டும். | நீடிக்கப்பட்டதாகவும் மதிலை நிர்மாணித்தலுக்கான முதலாவது காலநீடிப்பு வழங்கப்படாமல் சமர்ப்பித்த காரணங்கள் நியாயமானதாக இருந்தமையால் இரண்டாவது நீடிப்பு வழங்கப்பட்டதாகவும். |
| ii | நிர்மாணத்தின் எஞ்சிய வையாக குறிப்பிடப் பட்டிருந்த ரூபா 14,518,048 தொகையில் ரூபா 5,405,626 ஆன மேலதிக வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இம்மேலதிக வேலைகளுக்காக ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2 சதவீத கழிவான ரூபா 108,113 தொகை கழிக்கப் பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு வேலை விடயத்திற்கு பதிலாக மேலதிக வேலைகள் மேற் கொள்ளப் பட்டிருந்தன. ஆதலால் கழிவுத் தொகை கழிக்கப்பட வேண்டும். | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வேலைகள் மற்றும் அதன் அளவில் 25 சதவீதம் வரை மாத்திரம் ஒப்பந்தகாரரின் கழிவு செல்லுபடியாகும். |
| iii | விலை அதிகரிப்பிற்கு கொடுப்பனவு உடன்படிக்கையில் இணக்கப்பாடொன்று காணப்படாத போதும் இறுதிப்பட்டியல் மூலம் விலை அதிகரிப்பிற்காக ரூபா 3,324,543 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சகல கொடுப்பனவுகளும் சட்டரீதியாக நிறைவேற்றப்பட வேண்டும். | உடன்படிக்கை கைச்சாத்திடும் போது ஏற்பட்ட தவறொன்றாகும். |
| iv | தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் தாமத கட்டணமாக 0.05 சதவீதம் அறவிட வேண்டிய போதிலும் 0.025 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. மேலும் கட்டிட நிர்மாணத்தின் தாமதம் | அரசிற்கு அறவிட வேண்டிய பெறுவனவுகளை அறவிடுவதற்கு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உத்தியோகத்தர்கள் நேர்மையாக | வேலை நிறைவு அறிக்கை மாவட்ட பொறியியலாளருக்கு 2020.06.01 ஆந் திகதி அதாவது 14 மாதங்களுக்கு பின்னர் கிடைத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. மதிலுக்கான தாமதக் கட்டணங்கள் இறுதிப் பட்டியலில் அறவிடுவதாகவும். |

| | | | |
|---|---|---|---|
| | 326 நாட்களுக்குரியதாக உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 6,120,806 ஆன தாமதக் கட்டணங்கள் மற்றும் மதில் சுவர் நிர்மாண வேலையின் 150 தாமத நாட்களுக்காக தாமதக் கட்டணங்களாக ரூபா 1,265,414 அறவிடப்பட வேண்டியிருந்தது. | செயற்பட வேண்டும். | |
| v | உடன்படிக்கையின் பிரகாரம் திருப்பி அறவிட வேண்டிய முற்பணத் தொகையில் 01 மாதம் முதல் 03 மாதங்கள் வரை 06 மாதங்களுக்குள் முறையாக அறவிடாமை காரணமாக ரூபா 5,558,482 தொகையான அரசின் பணம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது. | அரசின் பணத்தை உரிய திகதிகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி வைக்கும் பதிவேடு (SBD) ஆலோசணைகள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டதாகவும். |
| vi | நிர்மாண வேலையின் இறுதிப் பட்டியல் கொடுப்பனவின் போது சேமிப்பு, (Savings) கைவிடப்பட்ட வேலைகள், மேலதிகமாக செய்த வேலைகள் உட்பட ஒப்பீட்டுக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய திட்டம் (AS build Drawings) உரித்து கோராத சான்றிதழ், நிறைவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. இந்நிலைமையின் கீழ் எதிர்காலத்தில் ஏற்படும் | உத்தியோகத்தர் கள் தமது பொறுப்பினை வெளிப்படையாக நிறைவேற்ற வேண்டும. | ஒப்பீட்டுக் கூற்று தயாரிக்கும் தேவைப்பாடு அத்திய வசியமற்றது. மேலதிக வேலைப் பகுதிகளை பட்டியல் மூலம் கண்டுபிடித்து கொள்ளலாம். AS build drawings இற்காக மதிப்பீட்டில் நிதிஏற்பாடு மேற் கொள்ளப்படாமையால் அது இடம்பெறவில்லை. உரித்து இன்மை கோரல் சான்றிதழ் பாரிய செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்படுவதால் அது இடம்பெறவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | திருத்த வேலைகள், சரிப்படுத்தல்கள் மேற் கொள்ள முடியாத நிலைமையொன்று உருவாகுவதாகவும் உடன்படிக்கையின் பிரகாரம் கடப்பாட்டிலிருந்து விடுபடுவதாக உறுதிப்படுத்தலை பெற்றுக் கொள்ளாமை காரணமாக எதிர் காலத்தில் ஒப்பந்தக்காரர் மேலும் கடப்பாடுகளை ஏற்படுத்துவதற்குரிய சந்தர்ப்பம் உருவாகியிருந்ததாக அவதானிக்கப்பட்டது | | |
| vii | ஒகெவெல பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடம் மற்றும் மதிலை நிர்மாணிக்கும் திட்டம் என்பன நகர அபிவிருத்தி அதிகாரசபை/ உள்ளுராட்சி மன்றங்களுக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | அரசின் சட்ட விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | எந்தவொரு அரச கட்டிடத்திற்கும் உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவில்லையெனவும் எதிர்காலததில் உரிய அங்கீகாரத்திற்காக தேவையான நடவடிக்கை எடுப்பதாக |

## 3.4 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மீளாய்வாண்டின் இறுதி வரை 12 மாதங்கள் மற்றும் 32 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியொன்று கடந்திருந்த ரூபா 25,000 இற்கு குறைந்த 09 சம்பவங்களுக்குரிய மொத்தம் ரூபா 73,253 ஆன சேதங்கள் மற்றும் நட்டங்களும் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட 20 | அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு தொடர்பான கோவைகளின் செயற்பாடுகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். | கோவைகளின் உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் |

சம்பவங்களுக்குரிய ரூபா 8,233,211 கூட்டு பெறுமதியான நட்டங்களும் சேதங்களும் நிலவின. மீளாய்வாண்டின் இறுதியில் அந்த நட்டம் மற்றும் சேதங்களை அறவிடுவது தொடர்பாக கோவைகளின் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்பினை கேள்வி கோரி விற்பனை செய்வதை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு 2019 யூன் 18 ஆந் திகதி நடைபெற்ற வாழ்க்கைச் செலவினம் தொடர்பான அமைச்சரவை உப குழு கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருக்கையில் மாவட்ட செயலகத்தினால் 2018/19 பெரும்போகத்திற் குரிய விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட 8578.75 மெற்றிக் தொன் நெல்லை விற்பனை செய்வதற்காக 2019 யூலை 01 ஆந் திகதி பெறுகை அறிவித்தல் மும்மொழிககளிலும் மூன்று பத்திரிகைகளில் வெளியிடுவதற்காக 2019 யூலை மாதம் 7/235 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 161,460 தொகை பத்திரிகை முகவரொருவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தேசிய ரீதியில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நிறுவனத்திற்கு தாமதமின்றி தொடர்பு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தேவையற்ற செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கேள்வி கோருவதை தற்காலிகமாக இடை நிறுத்துவதாக விவசாய அமைச்சினால் 2019.0710 ஆந் திகதியே அறிவிக்கப்பட்டதால் 2019.07.01 ஆந் திகதி பத்திரிகை விளம்பரத்தை வெளியிடுவதை தவிர்ப்பதற்கு இயலுமை கிடைக்கவில்லையெனவும் |

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அம்பலந்தோட்ட பிரதேச செயலக பிரிவிற்கும் பின்னர் தங்காலை பிரதேச செயலக பிரிவிற்குரிய படஅத தெற்கு எரம்புகலயாயவில் அமைந்துள்ள 16 ஆம் இலக்க கற்குழி 04 ஏக்கர் அளவிலான அரசின் காணி நபரொருவரினால் தாம் நீண்ட நாட்களாக காணியை உடமை கொண்டிருந்ததன் காரணமாக தமது பெயரில் உறுதியொன்றை தயாரித்து 2018 மார்ச் 14 ஆந் திகதி தங்காலை காணி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அரசின் காணி அத்துமீறிய பயன்பாட்டிற்கு பயன்படுத்துதல் மற்றும் தமது பெயரில் பதிவு செய்து கொண்டமை தொடர்பாக இரண்டு பிரதேச செயலகங் களினாலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசின் காணி தொடர்பாக அரசின் காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நிலுவை தொகையை எதிர் காலத்தில் அறவிடுவதாகவும் முறைமையை சீராக்கி எதிர்காலத்தில் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் |
| (ஆ) | அம்பலந்தொட்ட பிரதேச செயலக பிரிவின் லியன்கஸ்கொட்ட பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் கருங்கல் வேலைத்தளம் ஆரம்பமான 2017 ஒக்தோபர் 23 ஆந் திகதி முதல் 2019 ஒக்தோபர் 16 | உதவி வெடிபொருள் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்பட்ட வெடி பொருட்கள் உரிய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதா என்பது தொடர்பாக முறையான பின்தொடர் நடவடிக்கை | புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்திடமிருந்து தகவல்கள் பெற்றுக் கொண்டு பதிலை வழங்குவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதி வரை 26244 கி.கிராம் வெடிபொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் உத்தியோத்தர்களின் 2019 ஒக்தோபர் 16 ஆந் திகதி வெளிக்கள பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் அகழப்பட்ட மொத்த கருங்கள் அளவு 12656 கியுப்களாகும். அதற்காக பயன்படுத்தப்படும் வெடி பொருட்களின் குறைந்த அளவு 6328 கி.கிராம்களாகும். அதன் பிரகாரம் எஞ்சிய 19916 கி.கிராம் வெடிபொருட்கள் அதாவது வழங்கப்பட்ட அளவில் 76 சதவீதமான மிகை வெடிபொருட்கள் எச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டதென வெளிப்படுத்தப்படவில்லை. | செயற்பாடு மூலம் உறுதிப்படுத்த வேண்டியதுடன் இவ்வாறு மேலதிகமான வெடிபொருட்கள் வெளித்தரப்பினருக்கு விடுவித்தல் தேசிய பாதுகாப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டிய காரணமொன்றாகும். | |
| (இ) | 2011 சிறு போகத்தின் நெல் கொள்வனவிற்காக திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து கிடைத்த தொகையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரை மாவட்ட செயலகம் வழங்கிய வட்டியற்ற கடன தொகையில் ரூபா 5 மில்லியன் கணக்காய்வு திகதியான 2020 பெப்ரவரி 06 ஆந் திகதியிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தேசிய தேவைப்பாட்டிற்காக வெளித்தரப்பினருக்கு வழங்கிய அரசின் பணத்தை தாமதமின்றி அறவிட்டு திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டும். | இத்தொகையை அறவிடுவதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் இதுவரை அறவிடப்படாமல் இருப்பதாகவும் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதாகவும் |

4. **நல்லாளுகை**

4.1 **பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | i | சமூர்தி நலனாலிகளை தெரிவுசெய்யும் போது சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்பின் தலைவர் ஆகிய உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்ட 21 நலனாலிகளுடன் கூடிய முன்னுரிமை பதிவேட்டின் வரிசை ஒழுங்கினை கருத்தினை கொள்ளாமல் அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் அரவனமுள்ள கிராம சேவையாளர் பிரிவின் முன்னுரிமை பதிவேட்டின் முதலாவது 07 பேருடன் இறுதி 04 பேருக்கு சமூர்தி உரிமை பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நலனாலிகளைத் தெரிவு செய்வதற்கும் நலன்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| | ii | கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் அம்பாந்தோட்ட மற்றும் பெலியத்த பிரதேச செயலகங்களின் 03 கிராம சேவையாளர் பிரிவுகளில் மிகவும் தகுதியான முன்னுரிமை பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்ட 30 குடும்பங்களுக்காகவும் முன்னுரிமை பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்படாத எனினும் தகைமையுடைய | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்க இணங்க குறித்த நியதிகளின் பிரகாரம் நலனாலிகளை தெரிவுசெய்வதற்கும் நலன்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாவட்டத்தில் முன்னுரிமை பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்ட 15817 நபர்களின் பெயர் பட்டியலொன்று பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் நாயகத்தினால் 13227 அளவொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் முன்னுரிமை பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட முன்னரிமையை கருத்திற் |

| | | | |
|---|---|---|---|
| | 05 குடும்பங்களுக்காக சமூர்தி நலன்கள் கிடைத்திருக்கவில்லை. | | கொள்ளாமல் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரித்து அனுப்பி வைக்கப்பட்ட பதிவேட்டின் பட்டோலையின் பிரகாரம் நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் |
| iii | நலன்களை வழங்கும் நியதிகளின் முன்னரிமை கருத்திற் கொள்ளப்படாமல் பெலிஅத்த பிரதேச செயலக பிரிவின் இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளில் வருமான வழிகளை உடைய 04 நலனாலிகளுக்கு சமூர்தி நலன்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் இணங்க நலனாலிகளை தெரிவுசெய்வதற்கும் நலன்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | பெலியத்த, தங்காலை, ஒகெவெல மற்றும் வீரகெட்டிய ஆகிய நான்கு பிரதேச செயலக பிரிவுகளின் 1209 நலனாலிகளுக்காக கம்பெரலிய வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வறிய குடும்பங்ககளில் தற்காலிக கூரைகளை நிரந்தர கூரைகளாக மாற்றுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 120,806,068 ஆன நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்ட நியதிகளின் பிரகாரம் தகைமையான நலனாலிகளை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நலன்களை தெரிவுசெய்யும் அதிகாரம் மாவட்ட செயலாளருக்க அல்லது அந்த உத்தியோகத்தர்களுக்கு உரித்தல்லாத போதும் பிரதேச செயலகங்களில் உரிய உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி நலனாலிகள் தொடர்பாக பரீட்சித்து உதவிகளை வழங்குதல் இடம்பெறுவதாகவும் |
| i | மாவட்டத்தில் கூடிய வறுமை மட்டத்தில் உள்ள பிரதேச செயலக பிரிவுகள் தெரிவு செய்யப்படாமல் குறைந்த வறுமை மட்டத்தில் உள்ள மேலே குறிப்பிடப்பட்ட பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் நலனாலிகள் | மேற்படி பரிந்துரை பொருந்தும் | மேற்படி கருத்துரை பொருந்தும் |

| | | | |
|---|---|---|---|
| | தெரிவு செய்தல் முறைமையான நடைமுறையொன்றின் பிரகாரம் இடம் பெற்றிருக்கவில்லை. | | |
| ii | நலனாலிகளை தெரிவு செய்வதற்கு சரியான மற்றும் உரிய நியதிகளை பயன்படுத்தாமையால் 567 நலனாலிகளுக்காக ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாடுகளில் 20 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை அளவொன்று மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் 86 நலனாலிகளுக்கு உதவித் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி பரிந்துரை பொருந்தும் | மேற்படி கருத்துரை பொருந்தும் |

## 5. மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ------------------------------------- | ---------------- | ------------------------------------------ |
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் மாவட்ட செயலகத்தில் மற்றும் பிரதேச செயலகங்களில் பதவியணியில் 114 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 07மிகை பதவியணியினர் பேராக தொடர்பாக அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை பதவியணியனிருக்காக முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒட்டுமொத்தமான கொள்ளும் போது வெற்றிடங்கள் மாத்திரமே நிலவுகின்றன. மிகையாக காண்பிப்பதற்கு நேர்வது குறித்த தரத்திற்கு மேற்பட்ட அளவொன்று அத்தரத்தில் காணப்படுவதால் ஆகும். வெற்றிடங்கள் தொடர்பில் ஒவ்வொரு ஆண்டும் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளுதுடன், புதிய உத்தியோகத்தர்கள் கிடைத்தன் பின்னர் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |